<u>**சார்பு நீதிமன்றம், செஞ்சி**</u>

**அ.வ.எண்.25/10** **நாள்.12.02.2020**

2020-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரி | தொழில் | |
| த.பெ/க.பெ. | கிருஷ்ணமூர்த்தி | சாதி | |
| கிராமம் | | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 72 |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

நான் சென்னையில் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் 2 அட்டவணை சொத்துகள் உள்ளது. முதல் அட்டவணை சொத்து மேல்சேவூர் கிராமம் கிழக்கு 1 முதல் 9 அயிட்ட நிலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேல்சேவூர் கிராமம் மேற்கு எல்லையில் 10 முதல் 17 அயிட்ட சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே நம்பர், பட்டா எண் எனக்கு சொல்ல தெரியவில்லை. மேல்சேவூர் கிராமம் கிழக்கு எல்லையில் உள்ள சொத்துகள் மொத்தம் எவ்வளவு என்றால், சுமாராக 10 அல்லது 15 ஏக்கர் இருக்கும் சரியாக சொல்லத்தெரியவில்லை. மேல்சேவூர் கிராமம் மேற்கு எல்லையில் உள்ள சொத்துகள் எவ்வளவு விஸ்தீரணம் என குறிப்பிட்டு என்னால் சொல்லயியலாது என்றால் சரிதான். ஐக்குபந்தி எனக்கு தெரியவில்லை. இந்த சொத்து விவரத்தில் முதல் அட்டவணை சொத்துகளில் சொத்து விவரம் குறிப்பிட்டு ஒரு, ஒரு அயிட்டத்திலும் பாதி பாகம் என்று தான குறிப்பிடப்பட்டுள்ளேன். மீதி உள்ள பாதி சொத்து யாருக்கு பாத்தியம் என எனக்கு தெரியாது. முதல் அட்டவணை சொத்துகளை எனது அத்தை மகன்கள் மற்றும் பெயரன்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். அத்தை குள்ளம்மாள் என்பவரது மகன் சுந்தரம் என்பவர் பயிர் செய்து வருகிறார். சுந்தரம் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அதன்பிறகு சுந்தரம் குமாரர்கள் 2 பிள்ளைகள் பயிர் வைத்து வருகிறார்கள். அவர்கள் பெயர் தெரியவில்லை. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ஜெயராமன். என்

கணவர் கிருஷ்ணமூர்த்தியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். மற்றொரு சகோதரி ருக்மணியின் கணவர் பெயர் ராஜாபாதர் என்றால் சரிதான். ருக்மணியின் வாரிசு ஒரே மகள் மாலா. இவ்வழக்கில் 3ம் வாதி. ருக்மணியின் கணவர் ராஜாபாதர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ருக்மணியின் சட்டபடியான வாரிசான ராஜாபாதரை சேர்க்காததால் இவ்வழக்கு சட்டபடி நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வரதப்ப நாயக்கர் அவருடன் பிறந்தவர்கள் பெருமாள் நாயக்கர், செளபாக்கியம், மாணிக்கம்மாள், மற்றும் குள்ளம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள். வரதப்ப நாயக்கரும், பெருமாள் நாயக்கரும் பாகம் பிரித்து கொள்ளவில்லை. அதனால் வரதப்ப நாயக்கர், வாரிசுகள் மற்றும் உடன் பிறந்தவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அவர்கள் தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள். வரதப்ப நாயக்கர் சென்னைக்கு பிழைப்பிற்காக சென்றபிறகு தான் நாங்கள் அங்கே பிறந்தோம். திருமணம் ஆனபிறகு தான் சென்னை சென்றோம். சென்னைக்கு சென்றபிறகு தான் என் அப்பாவிற்கு அனைத்து குழந்தைகளும் பிறந்தது. சென்னைக்கு சென்றபிறகு மேல்சேவூரில் தான் சொத்துகள் எதையும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. அனுபவித்தார். என் அப்பா சொல்லி தான் அத்தையுடைய குமாரர்களும், அவரது பெயரன்களும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். முதல் அட்டவணையில் 14வது அயிட்ட சொத்து 02.06.1999ம் தேதியில் விற்கப்பட்டு விட்டது என்றால், முதலில் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் தெரிந்து கொண்டேன். கிரையம் செய்யப்பட்ட விவரத்தை வழக்குறையில் சொல்லியுள்ளேன். அந்த கிரையம் பற்றி வழக்கில் சொல்லியுள்ளதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குணசேகரனுக்கு சொத்தினை விற்று இருக்கிறார். எனது தம்பி கிரையம் செய்து இருக்கிறார். குணசேகரன் 4ம் பிரதிவாதி. விற்ற சொத்தினுடைய மதிப்பை வழக்கு தாக்கல் செய்த 2 வருடம் கழித்து வல்லம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தெரிந்து கொண்டேன். அந்த சொத்தின் மதிப்பு ரூ.95,00,000/- (தொண்ணூற்று ஐந்து லட்சம்) என சொன்னார்கள். கிரையத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால், சரிதான். சொத்தினுடைய மதிப்பை குறைத்து வழக்குரையில் போட்டுள்ளேன் என்றால் குறைத்துதான் போட்டுள்ளேன். எனக்கு 3 மகன்கள், 3 மகள்கள். எனது

ரோமியோபதி மருத்துவ டாக்டராக தனியாக பணியாற்றி வந்தார். அஞ்சல் துறையில் E.D-யாக பணியாற்றி வந்தார். நாங்கள் விழுப்புரத்தில் சொந்த வீட்டில் குடியிருக்கிறோம். அந்த வீடு எங்கள் மாமனார் வழியில் கிடைத்த பூர்வீக சொத்து. வறியவர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் நல்ல வருமானத்துடன் 4, 5 லாரி வைத்துள்ளேன் என்றாலும், உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெயரில் எத்தனை லாரி ஓடுகிறது என்றால், என் பெயரில் லாரி எதுவும் ஓடவில்லை. நான் வேண்டுமென்றே சொத்தின் மதிப்பை குறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் அட்டவணை சொத்துகளை ஏர் ஓட்டி பயிர் செய்து அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. முதல் அட்டவணை சொத்துகளின் பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. அடங்களில் யார் பயிர் வைக்கிறார்கள் என, என்ற விவரம் எனக்கு தெரியாது. 2வது அட்டவணை ஆ-சொத்தில் சென்னையில் உள்ள சொத்தில் எப்போது வீடு கட்டப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. பாயிடமிருந்து என் அப்பா வாங்கி கட்டினார். அந்த பாயியுடைய பெயர் எனக்கு தெரியாது. கிரையம் மயிலாப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிரையம் பத்திரம் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி ஜானகிராமன் வெளிநபரிடம் கடன் வாங்கி சென்னையில் 2வது அயிட்ட சொத்தினை வீட்டை கட்டினார் என்றால் சரியல்ல. இடம் வக்போர்டுக்கு சொந்தமான இடம் என்றால், சரியல்ல. அது பாயிக்கு பாத்தியமான இடம். அந்த இடம் வக்போர்டுக்கு சொந்தமான இடம். அந்த இடம் யாருக்கும் சொந்தமான இடம் அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த சொத்து சம்பந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வக்போர்டு உத்திரவின் பேரில் 1ம பிரதிவாதி வரி செலுத்தி கொண்டு தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அடமான பத்திரம் எப்போது யாரிடம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என எனக்கு தெரியாது. வீடு கட்டுவதற்காக அடமானம் வாங்கினார். இந்த தொகையை வைத்து தான் வீடு கட்டப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னை நீக்கி ஊஸ்டர் என்ற முறையில் முதல் அட்டவணை

சொத்துகளை 1ம் பிரதிவாதி தரப்பினர் அனுபவித்து வருவதால், அதில் எனக்கு பாகம்



இல்லை என்று சொன்னால் சரியல்ல. சென்னையில் உள்ள 2வது அட்டவணை சொத்து அது வக்போர்டுக்கு சொந்தமான சொத்து அதில் 1ம் பிரதிவாதி வக்போர்டுக்கு வரி செலுத்தி கொண்டு அனுபவித்து வருவதாலும் 1ம் பிரதிவாதி கட்டிய வீடு என்பதாலும், 2ம் அட்டவணை சொத்தில் யாருக்கும் பாக பாத்தியம் கிடையாது என்றாலும், 1ம் பிரதிவாதிக்கு முழுபாத்தியமான சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீட்டு விஷேசங்களுக்கு சொத்து பிரச்சனையிலிருந்து போக்குவரத்து இல்லை. அதற்கு முன்பு சகஜமாக இருந்தோம். எனக்கும் என் தம்பி வீட்டிற்கும் எந்த வித தொடர்பு இல்லாமல் எனக்கு திருமணம் ஆனதிலிருந்து கணவர் வீட்டில் இருப்பதால் என்னை நீக்கி முதல் அட்டவணை சொத்துகளை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றாலும், ஊஸ்டர் என்ற முறையில் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.